நம் பிள்ளைகளிடத்தில் மீளும்தன்மை வளர்வதற்கு **S.P.A.C.E** கொடுத்தல்

# மீளும்தன்மை

## S — Support ஆதரவளித்தல்

- கவனித்துக் கேட்பதில் ஆர்வம் காட்டுங்கள்
- உடன்பாடான கருத்துரையை வழங்கி ஆதரவு கொடுங்கள்

## P — Problem Solve பிரச்சினைக்குத் தீர்வு காணுதல்

- பிரச்சினைகளைப்பற்றியும் பின்னடைவுகளைப்பற்றியும் சேர்ந்து மீள்நோக்குங்கள்
- மாற்றுத் திட்டங்களை உருவாக்குவதற்கு உங்கள் பிள்ளைக்கு வழிகாட்டுங்கள்

## A — Affirm உறுதிப்படுத்துதல்

- குறிப்பிட்டுச் சொல்லிப் பாராட்டுங்கள்
- பலங்களையும் முயற்சிகளையும் அங்கீகரியுங்கள்

## C — Cheer உற்சாகப்படுத்துதல்

- ஒவ்வொரு முயற்சியிலும் உங்கள் பிள்ளையை உற்சாகப்படுத்துங்கள்
- சிறிது பெரிது என்று பாராமல் எல்லா வெற்றிகளையும் கொண்டாடுங்கள்
- மீளும்தன்மையை வலியுறுத்தும் ஊக்கமளிக்கும் கதைகளைக் கூறுங்கள்

## E — Empower அதிகாரமளித்தல்

- உங்கள் பிள்ளைகள் தங்கள் எண்ணங்களைத் தெரிவிப்பதற்கும் முடிவெடுப்பதற்கும் வழிவிடுங்கள்
- துணிந்து செயல்படவும் சவால்களைச் சந்திக்கவும் வாய்ப்பளியுங்கள்
- உங்கள் பிள்ளைகளின் திட்டங்களுக்கும் செயல்களுக்கும் அவர்களையே பொறுப்பேற்க விடுங்கள்

# நம் உரையாடல்களில் S.P.A.C.E இடம்பெறச் செய்தல்

| அதிகரிக்க வேண்டியவை | குறைத்துக்கொள்ள வேண்டியவை |
|---|---|
| **Support – ஆதரவளித்தல்**: ஏற்றுக்கொள்ளவும், | குறைத்து எடைபோடாதீர்கள் |
| "மேலும் கூறு....."<br>"நீ என்ன நினைக்கிறாய் என்பது முக்கியம்." | "நீ இவ்வாறு உணர தேவையே இல்லை." |
| **Problem solve – பிரச்சினைக்குத் தீர்வு காணுதல்**: சேர்ந்து செய்யவும், | நீங்களே செய்யாதீர்கள் |
| "இதற்கு முன் நீ செய்து பார்த்ததில் எது வெற்றி அளித்தது?"<br>"இதிலிருந்து நாம் என்ன கற்றுக்கொள்ளலாம் என்பதைப்பற்றிச் சிந்திப்போம்." | "இதை இப்படித்தான் செய்யவேண்டும்."<br>"நான் இதற்கு முன்பே சொன்னேன். நீ ஏன் என் பேச்சைக் கேட்கவில்லை?" |
| **Affirm – உறுதிப்படுத்துதல்**: குறிப்பிட்டுச் சொல்லவும், | பொதுவாகச் சொல்லாதீர்கள் |
| "நல்ல முயற்சி!"<br>"நீ இதை எப்படிச் செய்தாய்?"<br>"உனக்கு .........இல் அதிக திறமை உள்ளது" | "சிறப்பாகச் செய்துள்ளாய்!"<br>"நீ மிகவும் கெட்டிக்காரன்/கெட்டிக்காரி!" |
| **Cheer – உற்சாகப்படுத்துதல்**: நம்பிக்கை உண்டாக்கவும், | பயத்தை ஏற்படுத்தாதீர்கள் |
| "நன்றி! இது உண்மையிலேயே பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது" | "நீ இதைச் செய்யாவிட்டால்......"<br>"உனக்கு ........ கிடைக்காது" |
| **Empower – அதிகாரமளித்தல்**: படிப்படியாக ஏற்படுத்தித் தரவும், | அதிகாரம் செய்யாதீர்கள் |
| "உன் யோசனையைச் செயல்படுத்திப் பார்க்கலாம்"<br>"நான் உனக்கு எவ்வகையில் ஆதரவளிக்கவேண்டும் என நீ விரும்புகிறாய்?" | "என் வழியைப் பின்பற்றினால் இதைச் சீக்கிரம் செய்துவிடலாம்"<br>"நான் உனக்காக இதைச் செய்து தருகிறேன்" |

Ministry of Education
SINGAPORE

© 2017 Guidance Branch, Student Development Curriculum Division (SDCD), MOE